# 4

# கைம்மாறு கருதாமல்...



# இலவச மருத்துவ முகாம்

எந்தத் துறைக்கும் இல்லாத ஒரு சிறப்பு மருத்துவத் துறைக்கு உண்டு. பொருளாதார ஏற்றத்தாழ்வு நிறைந்த இன்றைய உலகில் எத்தனையோ பேர் பணமில்லாமல் மருத்துவம் பார்க்க இயலாமல் நோயால் வாடுகின்றனர். இப்படி யாரும் இருக்கக் கூடாது என்ற நல்ல உள்ளத்துடன் கடந்த 13 வருடங்களுக்கும் மேலாக மதுரை சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் இலவச ஹோமியோ மருத்துவ முகாமை நடத்தி வருகிறார் டாக்டர் தனபாலன். முகாமில் கலந்து கொள்பவர்களுக்குச் சிகிச்சையோடு தேவையான மருந்துகளையும் இலவசமாக வழங்கி வருகிறார். இதற்காக இவர் எவரிடமும் நன்கொடை வசூ ப்பது இல்லை.

**இளைஞர் மன்றம் நடத்தும் இலவசக் கண்சிகிச்சை முகாம்**

இடம் : அரசு நடுநிலைப்பள்ளி, பாம்பனார்

தேதி : 12-07-2009

காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை பிரபல கண் மருத்துவர்கள் முகாமில் கலந்து கொள்கின்றனர். இந்த அரிய வாய்ப்பைப் பயன் படுத்திப் பயனடைவீர்.

இவண்,

**இளைஞர் மன்றம்,**

**பாம்பனார்.**

- மேலே குறிப்பிட்டுள்ள பத்திரிகைச் செய்தியையும் சுவரொட்டியையும் பற்றி உங்கள் கருத்தைக் கூறுங்கள்.



# ஹென்றி டூனோன்

அமைதிக்கும் அழகுக்கும் பெயர் பெற்ற இயற்கை எழிலால் சூழப்பட்டது சுவிட்சர்லாந்து நாடு. அங்குள்ள அழகிய நகரமாகிய ஜெனிவாவில் ஒரு சிறிய வீட்டின் முன்னறையில் மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் தன்னந்தனியாக விளை யாடிக்கொண்டிருந்தான்.

அவனுடைய தந்தையார் அந்நகரின் பெரிய வர்த்தகர்களில் ஒருவர். அந் நகரத்தின் முக்கியப் பிரமுகர்கள் பட்டியலைத் தயாரித்தால் அதில் ஏழாவது அல் லது எட்டாவது இடத்தைப் பெறக்கூடியவர். அந்தச் சிறுவனின் அன்னையாரோ அன்பே வடிவமானவர், கருணையே உருவானவர். பொதுநலப் பணிகளுக்கே தம் நேரத்தையும், நினைவையும் செலவிட்டு வந்தார். அந்தச் சிறுவனின் ஆரம் பகாலக் கல்விக்கும் மனப்பண்புக்கும் அந்த அம்மையார்தான் காரணகர்த்தா வாக விளங்கினார்.

அன்று குளிர் மிகவும் கடுமையாக இருந்தது. ஆண்டின் பெரும்பகுதி யும் வெள்ளிப்பனி மூடிய மலைகளும் வீதிகளுமே காணக்கூடிய சுவிட்சர்லாந்து நாட்டில் குளிர் என்பது எப்பொழுதுமே உடம்பை நடுக்கக் கூடியது தான். என் றாலும், அன்று அந்த ஊர் மக்களுக்கே தாங்க முடியாத குளிராக இருந்தது.



ஜுன் ஹென்றிடூனோன் என்ற அச்சிறுவன் தனக்குத் தானேயும் தன் முன்னால் இருந்த பொம்மை களுடனும் பேசிக் கொண்டு விளை யாட்டில் மூழ்கியிருந்தான். அப் பொழுது அவனுடைய அன்னை யார் வெளியே செல்வதற்காகக் கையில் ஒரு கூடையோடு டூனோன் இருந்த முன்னறைக்கு வந்தார். டூனோன் தனது விளையாட்டைப் பாதியிலேயே நிறுத்திவிட்டுத் தன் அம்மாவைப் பார்த்து “எங்கே அம்மா போகிறாய்?

நானும் வரட்டுமா?" எனக் கேட்டான். "வேண்டாம் மகனே! இன்று வெளியே குளிர் மிகவும் அதிகமாக இருக்கிறது. உன்னால் தாங்க முடியாது. நீ சமர்த்தாக வீட்டிலேயே இரு! நான் சீக்கிரம் திரும்பி வந்து உனக்கு நல்ல நல்ல கதைகளை யெல்லாம் சொல்கிறேன்" என்றார் அம்மா.

"சரி அம்மா"! என்று ஹென்றி தலையாட்டினாலும், தன் அன்னை வெளியே செல்வதைக் கலங்கிய கண்களோடுதான் பார்த்துக்கொண்டிருந்தான். அன்னை யின் வண்டி மறைந்ததும் அவனும் ஒரு கூடையை எடுத்துக்கொண்டு அனாதை விடுதிக்குப் போகிறவனைப்போலப் பாவித்துக்கொண்டு வீட்டுக்குள்ளேயே நடந்தான். பனித்திவலைகள் படிந்த ஜன்னல் கண்ணாடியில் பல்வேறு உருவங் களை வரைந்து பார்த்தான். பொம்மைகளை நிறுத்தி வைத்து மேலும் சிறிது நேரம் விளையாடினான்.

ஹென்றிக்கு எட்டு வயது. ஒரு நாள் அவன் தன் தந்தையாரோடு சென்ற போது கா ல் விலங்கு மாட்டப்பட்ட கைதிகள் பெரும்சுமையைத் தூக்கிக் கொண்டு சிரமப்பட்டு நடந்து வருவதைக் கண்டு திடுக்கிட்டுப்போனான் இதென்ன கொடுமை! பெரும் சுமையைத் தூக்கும்படி கட்டாயப்படுத்தப்படும் ஒரு மனிதனுக்குக் கா ல் விலங்கு மாட்டுவது என்ன நியாயம்? என்று துடித்துப் போனான்.

அவன் கண்ட அந்தக் காட்சியின் கொடூரம் அன்றிரவு அவனைத் தூங்க விடவில்லை. அதனால், தான் பெரியவன் ஆனதும், இப்படிப்பட்ட கைதிகளின் நிலையை உயர்த்துவதற்காகப் பாடுபடுவதென்று அன்றே உறுதி பூண்டான்.

சிறுவன் ஹென்றி, பள்ளிப்படிப்பிலும் கெட்டிக்காரனாக இருந்தான். கிரீமி யப் போரில் ஆங்கிலேயப் படை வீரர்களின் மருத்துவ வசதிக்காகப் பாடுபட்ட ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல், ஐரோப்பியச் சிறைச்சாலைச் சீர்திருத்தங்களுக்கா கவும் கைதிகளின் நல்வாழ்வுக்காகவும் பாடுபட்ட எ ஸபெத் ஃப்ரை முத யோரைப் பற்றித் தனது பாடப்புத்தகங்களில் கூறப்பட்டிருந்ததை அவன் மிக வும் ஆர்வமாகப் படித்திருந்தான். எனவே, இளம் வயதிலேயே ஹென்றி டூனான் நிறைய தர்மப்பணிகளில் ஈடுபட்டான். சமூகசேவைகளிலும் பங்கு கொண்டான். அதனால் ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் தொண்டு புரியும் சேவை

அமைப்பில் அங்கமானான். ஜெனிவா நகரச் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளுக்கு உணவும், உடையும் அளித்தான். அதே சமயம் சட்டத்தை மீறுவது தவறு என்றும் அவர்களுக்கு எடுத்துரைத்தான். இளம்பருவத்தை எட்டிய கட்டிளங்காளையான டூனானின் அறிவுரைகளைப் பல கைதிகள் கருத்தூன்றிக் கேட்டனர்.

ஒரு நாள் இரவில் காஸ்டிக்ஸோனிடிலா பீவ் என்னும் வட இத்தா யச் சிறு நகர விடுதி ஒன்றில் தூங்கிக்கொண்டிருந்தார் ஹென்றி டூனான். அதிகாலை மூன்று மணியளவில் பெரிய வெடிச்சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்தார். அந்த வேட்டுச்சத்தம் பக்கத்துக் கிராமத்தி ருந்து வந்த சத்தம் தான் என்பதை உணர அவருக்கு அதிக நேரம் ஆகவில்லை. அந்தக் கிராமத்தில் ஆயிரம் பேருக்கும் குறைவான மக்களே வாழ்ந்து வந்தனர் என்பதையும் டூனான் அறிவார். வெடிச்சத்தம் மேலும் மேலும் அதிகரித்தது. படுக்கையில் திரும்பவும் போய்ப் படுத்துக்கொள்ள அவருடைய மனம் ஒப்பவில்லை. உடைகளை மாற்றிக்கொண்டு அந்த ஊருக்கு வெளியே இருந்த குன்றை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

காலைக்கதிரவன் தன் செம்பொற்கதிர்களை வீசியவாறே கீழ்வானத்தில் உதயமானான். உடனே போர்க்களம் சுறுசுறுப்பாகியது. ஈட்டிகள் மின்னின. ஊதுகுழல்களும் டமாரங்களும் முழங்கின; துப்பாக்கிகள் பட பட வென்று ஒ த்தன. எங்கும் ஒரே பரபரப்பு! கூச்சல்! ஓலம்!

காலாட்படையினரும் குதிரைப்படையினரும் பாய்ந்து முன்னேறினர். புழுதிப்படலம் கிளம்பிக் கண்களை மறைத்தது. வெடிக்கும் குண்டுகள் வானத்தையே புகைத்திரையிட்டு மறைத்தன. ஆனால் வெயில் ஏற ஏறப் போர்க்களத்தில் நடப்பது தெளிவாகத் தெரிந்தது. இரவாகியும் போர் ஓய்ந்தபாடில்லை. கனத்த இதயத்தோடு அறைக்குத் திரும்பினார் டூனார். அன்று இரவு உறங்கவே இல்லை.

மறுநாள் காலையில் அந்தப் போர்க்களத்தைக் கண்டபோது கல்நெஞ்சுக்காரர்களையும் கலங்க வைத்திடும் காட்சிகள் நிறைந்திருந்தன. போர்க்களமெங்கும் மனித உடல்கள்... குதிரைகளின் சடலங்கள்... பண்ணைச் சுவர்களெல்லாம்

துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாகத் துளைக்கப்பட்டிருந்தன. சாலை நெடு கத் தலைக்கவசங்களும், இடுப்புவார்களும் சிதறிக் கிடந்தன. துப்பாக்கிகள், தோட்டாக்கள், தோல்பைகள் ,தகரடப்பாக்கள் முத ய பொருட்களும் சிதறிக் கிடந்தன.

போரால் விளைந்த நாசமும், அழிவும் ஏராளம். ஐம்பதினாயிரத்திற்கு மேற் பட்ட வீரர்களும் அதிகாரிகளும் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் கையிழந்தும் கால் இழந்தும் மரணவேதனையில் துடித்துக் கொண்டிருந்தனர்.

ஹென்றி டூனான் இவையனைத்தையும் செயலற்ற நிலையில் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் சீக்கிரமே சினமும் அதிர்ச்சியும் அவரை ஆட்கொண் டன. அடிபட்டவர்களை இப்படியே சாக விடலாமா? அதற்கு என்ன செய்ய லாம்? எனச் சிந்திக்கத் தொடங்கினார்.

போரில் காயமுற்றோரைக் காப்பாற்றவும் மருத்துவச்சிகிச்சை அளிக்கவும் ஒரு சர்வதேச உடன்பாடு வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் நிறம், மொழி, இனம், மதம் முத ய பேதங்களைக் கடந்து பாரபட்சமின்றி யுத்தக்களங்களில் தொண்டாற்றுவதற்குத் துயர்துடைப்புத் தொண்டர்கள் அமைப்பு ஒன்றை நிறுவத் தீர்மானித்தார். இதன் பலனாக உருவானதே செஞ்சிலுவைச் சங்கம்.

1867–ஆம் ஆண்டில் நெதர்லாந்து அரசு அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொண்ட பின்னர் செஞ்சிலுவைச் சங்கம் தொடங்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- ஹென்றி டூனானின் கதையை வாசித்துக் கலந்துரையாடுங்கள்; கருத்துகளை வெளியிடுங்கள்.
- ஹென்றி டூனானின் மனதைப் பாதித்த போர்க்களக் காட்சிகளை விளக்குங்கள்.
- உங்கள் வட்டாரத்திலுள்ள சமூகசேவை நிறுவனங்களைப் பார்வையிட்டு அவை நடத்தும் சேவைகள் பற்றி எழுதுங்கள்.
- “படபட, கலகல, சலசல” இவை போன்ற தொடர்களைக் கூறுங்கள். அவை இடம்பெறும் வகையில் ஒரு நிகழ்ச்சியை எழுதுங்கள்.”

# இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

அமெரிக்காவிலுள்ள ஓஹையோ ஆற்றில் பெரும்வெள்ளம்! கரைகளையெல்லாம் உடைத்துக் கொண்டு ஓடியது. வெள்ளம் ஊருக்குள் புகுந்து மரங்களையும் வீடுகளையும் சாய்த்து அடித்துக்கொண்டு போய்விட்டது. சின்சினாட்டி நகரம் நீரில் மிதந்தது. அதுவும் போதாது என்று பெரும்புயலும் வீசியது. வீடுகளும் மரங்களும் அடியோடு சாய்ந்தன. வீடுகள் எல்லாம் கப்பல்களைப் போல நீரில் மிதந்தன. பல மனிதர்களையும் விலங்குகளையும் வெள்ளம் இழுத்துச் சென்றது.



இந்த வெள்ளச்சேதத்தைக் கேள்விப்பட்டுச் செஞ்சிலுவை அமைப்பாளரான கிளாராபர்ட்டன் நிலைகுலைந்து போய்விட்டார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அள்ளிக் கொடுங்கள் என்று வேண்டுகோள்விடுத்தார். பொருளும் பணமும் நிதியாகக் குவிந்தது. ஓடியாடிப் பொருள்களைச் சேகரிப்பதற்கும் தகவல்களைத் திரட்டவும் உடல் உறுதியும் ஊக்கமும் கொண்ட இளைஞர் பட்டாளம் தேவை என கிளாரா பர்ட்டன் விரும்பினார்.

பென்ஸில்வேனியாவில் உள்ள வாட்டர் போர்டு என்னும் ஊரில் 6 சிறுவர் சிறுமிகள் சேர்ந்து வெள்ள நிவாரண நிதிக்காக ஒரு கேளிக்கைக் காட்சி நடத்தினர். 51 டாலர்கள் நிதியாகச் சேர்ந்தது. ஓஹையோ வெள்ள நிவாரண நிதிக்காகச் சேர்த்த அந்தப் பணத்தைக் கிளாரா பர்ட்டனுக்கு அனுப்பினர். "இதை மிகவும் பயனுள்ள வகையில் செலவிடுங்கள்" என்று ஒரு குறிப்பும் எழுதிக் கையொப்பம் இட்டிருந்தனர்.

அந்தக் கடிதம் கிடைத்துச் சில நாட்களுக்குப் பின்னர் ஆற்றங்கரையில் ஒரு குழந்தையோடு தவித்துக்கொண்டு இருந்த பெண்மணியைச் சந்தித்தார் கிளாரா பர்ட்டன். பெருகி வந்த வெள்ளம் அவருடைய வீடு, மாடு, குதிரை

அனைத்தையும் அடித்துச் சென்று விட்டது. ஆதரிப்பார் யாரும் இல்லை; குடியிருக்க வீடும் இல்லை; குளிரைப் போக்கும் ஆடைகளும் இல்லை; உண்ண உணவும் இல்லை. இதுதான் திருமதி ஃபிரூவின் சோகக் கதை. அதைக் கேட்ட கிளாரா பார்ட்டன் மிகவும் வருந்தினார். ஆறு சிறுவர்கள் அனுப்பின 51 டாலர்களோடு மேலும் 49 டாலர்களையும் சேர்த்து 100 டாலர்களை அந்தப் பெண்மணியிடம் கொடுத்தார். ஒரு சிறிய வீட்டை அமைக்குமாறு கூறினார்.

வீட்டைக் கட்டிய ஃபிரூ அதற்கு ‘அறுவர்களின் இல்லம்’ என்று பெயர் சூட்டினார். ஒஹையோ ஆற்றில் படகுகளிலும் கப்பல்களிலும் போகின்றவர்கள் ‘ஆறு சிறுவர்கள் செஞ்சிலுவை முனை’ என்னும் பெயர்ப்பலகை அந்த வீட்டில் தொங்குவதைப் பல ஆண்டுகள் பார்த்து வந்தனர். மிக விரைவிலேயே செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள், இளைஞர்களையும் சங்கத்தில் சேர்க்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர். அதனால் 1922 ஆம் ஆண்டு இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் நிறுவப்பட்டது.

உடல்நலம், நல்வாழ்வு, சர்வதேச நட்பு ஆகியவற்றை வளர்ப்பதே அதன் கொள்கை. சமுதாயப் பொறுப்புகளை உணர்த்தி அவற்றை ஏற்கும்படி அந்த இளைஞர் சங்கம் பாடுபடும் என அறிவிக்கப்பட்டது. உலகம் முழுவதிலும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளைகள் தொடங்கப்பட்டன. கோடிக்கணக்கான இளைஞர்கள் சங்க உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

**“என் உடல் நலத்தையும் மற்றவர்களின் நலத்தையும் பேணுவேன். போற்றுவேன். நோயுற்றவர், அவதிப்படுவோர் குறிப்பாகக் குழந்தைகள் அனைவரையும் நண்பர்களாகக் கருதுவேன். எல்லோரிடமும் நட்பையும் நேசத்தையும் வளர்ப்பேன்,”**

என்பதே அந்த உறுதிமொழியாகும்.

இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் இளைஞர் அமைப்பில் சேர்ந்து அதன் இலட்சியங்களுக்காகப் பாடுபடுகின்றனர்.

இளைஞர் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் விடுமுறைக் காலங்களில் அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று தெருக்களைப் பெருக்கிச் சுத்தப்படுத்

துதல், சாலைகளைச் செப்பனிடுதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றனர். இனக் கலவரங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடைக்கலம் அளிப்பது, உணவு மற்றும் உடைகளைச் சேகரித்துத் தருவது போன்ற பணிகளையும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் இந்தியா முழுவதும் செய்து வருகிறது.. உலகில் துன்பத்திலும் வறுமையிலும் துயரப்படும் குழந்தைகளுக்கு இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் உதவி செய்து வருகிறது.

“மனித குலம் அனைத்தும் ஒன்றே” என்று உணருகின்ற இளம்வீரர்கள் மனிதாபிமானத்தைப் போதிப்பதையே தங்கள் முழுநேரப் பணியாக மேற்கொள்கின்றனர். நம் இந்திய நாட்டின் செஞ்சிலுவைச் சங்க இளைஞர்கள் கருத்தரங்குகளில் கலந்து கொள்வதற்காகப் பல்வேறு வெளிநாடுகளுக்குச் சென்று வருகிறார்கள். அதைப்போலப் பிறநாட்டு இளைஞர்கள் நம் நாட்டில் நடைபெறும் மாநாடுகளில் கலந்துகொள்கின்றனர். இவ்வாறு உலக இளைஞர்களுக்கிடையே வளர்ந்து வரும் நட்புறவால் பூமிக்கோளமே சுருங்கி வருகிறது.

## செயல்பாடுகள்

- கட்டுரையை வாசித்து உங்கள் உள்ளத்தைத் தொட்ட பகுதியை எழுதுங்கள்.
- இளைஞர் செஞ்சிலுவைச்சங்கத்தில் நீங்கள் சேர்ந்தால் என்னென்ன செய்வீர்கள்? விவாதித்துக் கருத்துகளை எழுதுங்கள்.
- இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் போல் உள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் தகவல்களைச் சேகரியுங்கள்; வகுப்பில் வாசியுங்கள்.
- தியாக உள்ளத்துடன் ஆரோக்கியச் சேவை புரியும் மருத்துவரை உங்கள் பள்ளிச் சுகாதார மன்ற விழாவிற்கு வருகை தருமாறு வேண்டி ஒரு கடிதம் எழுதுங்கள்.
- அடைப்புக்குறிக்குள்ளிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்வு செய்து நிரப்புங்கள்.

  .................................. கருணையே உருவானவர்.

  .................................. விளையாடிக் கொண்டிருந்தான்.

  .................................. சமத்தாக வீட்டிலேயே இரு.

  .................................. கருத்தூன்றிக் கேட்டனர்.

  (நாங்கள், அவர், அவன், அவர்கள், நீ)

# தன்னலம் கருதாத் தம்பதியர்



மறைந்த சமூக சேவகர் பாபா ஆம்தே யின் மகன் பிரகாஷ் ஆம்தே. இவருடைய மனைவி மந்தாகினி. இருவரும் டாக்டர்கள். மகாராஷ்டிராவில் உள்ள மிகவும் பின்தங்கிய பகுதியான கட்ச்ரோ மாவட்டத்தில் வாழும் மலைவாழ் பழங்குடியின மக்களின் வாழ்க் கைத்தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்து வதில் தங்கள் வாழ்க்கையை இத்தம்பதியர் முழுமையாக அர்ப்பணித்துள்ளனர்.

பாபா ஆம்தே உருவாக்கிய ஆனந்த வனம் ஆசிரமத்தில் பிரகாஷ் வளர்ந்தார். 1974-ம் ஆண்டு நாக்பூர் மருத்துவக்கல்லூரியில் அவர் படித்துக் கொண்டிருந்த போது தன்னுடைய தந்தையின் உத்தரவை ஏற்றுத் தனது மருத்துவப் பயிற்சியை உதறித் தள்ளிவிட்டு கோண்ட் இனப் பழங்குடி மக்களிடையே சமூகத்தொண் டாற்றுவதற்குத் தன் துணைவியார் மந்தாகினியுடன் காட்ச்ரோ வந்தார். மிக வும் பின்தங்கிய இப்பகுதியில் இருவரும் ஒரு கிளினிக்கைத் தொடங்கினர்.

கோண்ட் பழங்குடியினர் வெளியுலக மக்கள் யாரையும் நம்பாதவர்கள். பிரகாஷின் மருத்துவ உதவியை அவர்கள் முத ல் ஏற்க மறுத்தனர். பிரகாசும், மந்தாகினியும் பழங்குடியினரின் மொழியைக் கற்று, மெதுவாக அவர்கள் நம்பிக்கையைப் பெற்றனர்.

பிரகாஷ் ஆம்தே தம்பதியர் துவங்கிய கிளினிக் இன்று 50 படுக்கை வசதி கள் கொண்ட மருத்துவமனையாக உயர்ந்துள்ளது. ஐந்து டாக்டர்கள் பணி யாற்றுகின்றனர். ஆண்டுக்கு 40 ஆயிரம் பேர் மருத்துவச் சிகிச்சை பெறுகின் றனர். இதற்குக் கட்டணம் ஏதும் இல்லை. அதேபோல் பள்ளிக்கூடம் ஒன்றையும்

இத்தம்பதியர் நடத்தி வருகின்றனர். இதில் தற்போது 500 மாணவர்கள் படிக்கின்றனர்.

பழங்குடியின மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதில் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த பிரகாஷ் ஆம்தே அவரது மனைவி மந்தாகினி ஆகியோர் மகசேசே விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கலந்துரையாடிக் கருத்துகளை எழுதுங்கள்.
- உங்கள் வட்டாரத்திலுள்ள தன்னார்வலர்களைப் பேட்டி காண்பதற்குத் தேவையான வினாநிரல் தயாரியுங்கள்.
- குறிப்புகளின் அடிப்படையில் அன்னை தெரசாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதுங்கள்.

**குறிப்புகள்**

| | | |
|---|---|---|
| பிறந்த இடம் | - | யுகோஸ்லேவியா |
| பிறந்த ஆண்டு | - | 1910 ஆகஸ்டு 26 |
| தொண்டு நிறுவனங்கள் | - | தூய இதயம், அன்பு இல்லம் |
| சேவை செய்த இடம் | - | கல்கத்தா |
| கிடைத்த பரிசு | - | நோபல் பரிசு |
| துறை | - | சமாதானம் |
| பட்டம் | - | பாரத ரத்னா |

# சொற்பொழிவு

**(பாலூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் வழக்கம்போல் காலைக்கூட்டம்! மாணவர்கள் அணிவகுத்து நின்றனர். தலைமையாசிரியர் அறிவழகன் உரையாற்றினார்)**

அன்பார்ந்த மாணவர்களே! நமது வட்டாரத்தில் பலவகைத் தொற்று நோய்கள் பரவியவண்ணம் உள்ளன, குறிப்பாக சிக்குன்குனியா, டெங்கு காய்ச்சல் போன்ற நோய்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். நமது மாணவர்களில் சிலர் கூட இந்த நோய்களைால் பள்ளிக்கு வர முடியாத சூழ ல் உள்ளனர்.

இத்தகைய நோய்கள் பரவக் காரணம் என்ன? நலம் நிறைந்த நாட்டை உருவாக்கும் சிற்பிகளான நீங்களே சிந்திக்க வேண்டும். மக்கள் சுற்றுப்புறத் தூய்மைப் பாதுகாப்பில் போதிய கவனமின்றி இருப்பதே இதற்கெல்லாம் காரணம். சுற்றுப்புறத் தூய்மையினால் தான் நாடு தூய்மையாக இருக்கும்; நலம் நிறைந்த வாழ்வு மலரும்.

சுற்றுப்புறம் எப்படியெல்லாம் தூய்மையற்றதாக மாறுகின்றது? கழிவு நீர், குப்பைக்கூளங்கள், தூக்கியெறியப்படும் பயனற்ற பிளாஸ்டிக் பொருட்கள், சிரட்டைகள், தேங்கி நிற்கும் தண்ணீர், மூடி இல்லாத தண்ணீர்த்தேக்கிகள், ஆகியவற்றில் நோய்களைப் பரப்பும் கொசுக்கள் உருவாகிப் பெருகி விடுகின்றன. பல நோய்களுக்கும் காரணமாக இருப்பது இந்தக் கொசுக்களே! நமது நாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் சிக்குன் குனியா நோயினால் அவதிப்பட்ட செய்திகளைப் படித்திருப்பீர்கள்.

தனிமனிதத் தூய்மையில் கவனம் செலுத்தும் நாம் சுற்றுப்புறத் தூய்மையைக் காப்பதில் கவனம் செலுத்துவதில்லை. இதனால் சுகாதாரமற்ற நாடாக நம் நாடு மாறிவிடும். எனவே நோயற்ற, தூய்மையான நாடாகத் திகழ்ந்திடச் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும். குறிப்பாக மாணவச் சமுதாயம் நாட்டுமக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுவதோடு பள்ளி, சுற்றுப்புறம் ஆகியவற்றைத் தூய்மையின் இருப்பிடமாக மாற்ற வேண்டும், என அன்புடன் வேண்டுகிறேன். வணக்கம்.

## செயல்பாடுகள்

- துய்மையான நாடாகத் திகழ்ந்திட நாம் என்னென்ன செய்யவேண்டும் என தலைமையாசிரியர் கூறுகிறார்?
- "சமூக ஆரோக்கியம் பேணுதல்" என்ற தலைப்பில் வகுப்பில் உரைற்றக் குறிப்பு தயாரியுங்கள்.